
உ

சிவமயம்

# நினைவு மலர்



உயர்திரு நற்குணசிங்கம் அவர்களின் சிரேஸ்ட புதல்வன்

## செல்வன் சிவகுமார் அவர்களின்

மறைவு குறித்த

இறை துதிப்பாக்களும் இரங்கற்பாக்களும்

**In Memory of**

**Mr. NATKUNASINGAM SIVAKUMAR**

## 16.07.1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்வன் நற்குணசிங்கம் சிவகுமார் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஈழத்தாயின் எழில்தலையான வடபால் யாழ்ப்பாணத்தின் மாணிக்கமாக மாதகல் என்னும் கிராமம் அமைந்துள்ளது. சைவத்தமிழ் மரபு தழைத்து வளரும் இக் கிராமத்திலே திரும்பிய பக்கமெல்லாம் அருளளிக்கும் புகழ் கொண்ட ஆலயங்கள் நிறைந்துள்ளன. பாணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயம், நுணசை முருகன் ஆலயம், அரசடிப்பிள்ளையார் ஆலயம் குறிப்பிடத்தக்கவை. இவ்வாறான புகழ் கொண்ட கிராமத்திலே 26ம் திகதி வைகாசி மாதம் 1967ம் ஆண்டு பூராட நட்சத்திரத்தில் முருகன் வடிவில் நற்குணசிங்கம் (மின்பொறியியலாளர், இலங்கை மின்சார சபை) தவமணி தம்பதியினருக்கு சிரேஷ்ட புதல்வனான சிவகுமார் (குமார்) பிறந்தார். உடன்பிறப்புக்களான அருமை சகோதரி சறோஜினி, அன்புத் தம்பிகளான ஜெயக்குமார் (B.Sc (Hons)- கொழும்பு பல்கலைக்கழகம்), ராஜ்குமார் (பேராதனைப் பல்கலைக்கழகம்), செல்வக்குமார் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோருடன் இனிதே இன்புற வாழ்ந்தார்.

இவர் ஆரம்ப கல்வியை யாழ்/மாதகல் சென். தோமஸ் பாடசாலையிலும் பின்பு கொழும்பு இந்துக் கல்லூரியிலும் அடுத்து உயர்தர கல்வியை மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் நிறைவேற்றினார்.

இவருடைய துடிப்புமிக்க இளைமைப்பருவத்தில் நாட்டுக்காக பல சமூக சேவைகளை கடமை உணர்ச்சியுடனும் சிரித்த முகத்துடனும் ஆற்றினார்.

இவர் முருகன்மேல் வைத்த அளப்பரிய பக்தி காரணமாக முதலில் மாதகல் நுணசை முருகனுக்கும் பின் நாளில் கொம்பனித் தெரு முருகனுக்கும் வருடாவருடம் காவடி எடுத்தார். தந்தையின் உத்தியோக இடமாற்றம் காரணமாக இவர் கொழும்புக்குப் புறப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தது. இவருக்கு தனது பிறந்த மண்ணை விட்டுவர மனம் விடவில்லை. எனினும் தந்தையின் சொல்லை வேதவாக்கு என கருதி கொழும்பு புறப்பட்டார்.

ஆரம்பத்தில் இவரது அதீத கணக்கியல் திறமையால் Kreston M.N.S. & Co. இல் கணக்குப் பரிசோதகராக (Auditor) தொழில் பெற்றார். பின்னர் IAB (London), IFA (London) இறுதிப் பரீட்சைகளில் அதி திறமைச்சித்திகள் பெற்றதும் Ashok Traders இல் உதவிக் கணக்காளராக சேர்ந்தார். படிப்படியாக தனது தொழில் விடாமுயற்சியால் Accounts Executive ஆக பதவி உயர்வு பெற்றார். தொழில் புரியும் காலத்தில் தன்னையே பொருட்படுத்தாது கடமையே கண்ணியம் என செயல்பட்டு மேலதிகாரியின்நன்மதிப்பும் பெற்றார். அலுவலகத்தில் இவருடைய புன்முறுவல் பூத்த முகமும், ஈடுபாட்டோடு எதனையும் அவதானித்துக் காரியம் ஆற்றும் செயலும், பழகும் பண்பும் சக உத்தியோகஸ்தர்கள் மெச்சத்தக்கவகையில் செய்து அவர்களது அன்பையும் ஆதரவையும் பெற்றார்.

விதி எந்த வேளையில் என்ன செய்யும் என்பது எவருக்கும் புரியாத புதிராகும். இந்த இளைஞனின் வாலிப வனப்பும், வளமான வாழ்வும் நற்குணங்களும், நற்செய்கைகளும் இவரை வாழ்வாங்கு வாழப்போகும் திருமகன் என்றே எம்மை எண்ண வைத்தது. எமது இதய எண்ணங்கள் ஈடேறவில்லை. விதியின்தீர்மானமே நிறைவேறியது. எவரும் எதிர்பாரா வேளையில் 1996ம் ஆண்டு, ஆனி மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7.10 மணியளவில் மிருகசீராட நட்சத்திரத்துடன் கூடிய பூர்வபக்ஷ பிரதமை திதியில் இறைவன் திருவடிகளைச் சேர்ந்தார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Life History of
## Late Mr. NATKUNASINGAM SIVAKUMAR

Mr. Natkunasingam Sivakumar who passed away on 16.06.1996 at the age of 29 in Colombo was born on 26th May, 1967 into an aristocratically conservative family in a village called Mathagal in Jaffna. Mathagal has a great and glorious tradition on account of the historical and ancient temples situated there namely Goddess Amman Temple, Nunasai Murugan Temple and Arasady Pillaiyar Temple. Besides, this village has produced eminent Tamil Scholars, Educationists, great philosophers and philanthropists and religious personalities who have contributed immensely for the propagation, promotion and development of Hindu education, Hindu religion and Hindu culture. No wonder Mr.Sivakumar's parents Mr.Natkunasingam and Mrs. Thavamany Natkunasingam brought up their children in a religious atmosphere. Indeed Mr.Sivakumar was a devout devotee of Lord Muruga and he took Kavadi annually at Mathagal Murugan Temple and thereafter at Kompanytheru Murugan Temple at Slave Island.

Sivakumar's father, Mr. Natkunasingam is an Electrical Engineer attached to the Ceylon Electricity Board, Colombo and his brothers, Mr.Jeyakumar (B.Sc. (Hons.) -University of Colombo), Mr. Rajkumar and Mr.Selvakumar are pursuing their higher studies at the University of Peradeniya and University of Jaffna respectively. His only affectionate sister Sarojini is also staying with her parents in Colombo.

Mr.Sivakumar had his early education at Jaffna/MathagalSt.Thomas College and later at Colombo Hindu College and Manipay Hindu College where excelled in studies and sports.

Mr.Sivakumar had charming qualities which attracted everyone towards him. He had a pleasant, pleasing and smiling face even at trying

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

times, his usual manner of remaining unruffled, undisturbed, unperturbed and undaunted at time of turmoil were indeed remarkable. His gentle words at all times, his readiness to help anyone and everyone who crossed his path seeking help were greatly appreciated and admired by his friends and relatives.

Mr. Sivakumar's role of life can be summed up in the words ofJOHN WESLEY :

"Do all the good you can
By all the means you can
In all the ways you can
In all the places you can
At all the times you can
To all the people you can
As long as ever you can "

Mr. Sivakumar, on account of his father's transfer to Colombo, accompanied him and was employed in Colombo at **Kreston M.N.S. & Co.** as an **Auditor** since he was extremely good in Accounts. While working in this company he got through his IAB (London) and IFA (London) and obtained high marks in these examinations. Thereafter he joined **"Ashok Traders"** as an **Accounts Assistant** and due to his grit determination, hard work, perseverance and merit climbed up his way and finaly ended up as an **Accounts Executive**. He discharged his duties and responsibilities with total dedication, utter devotion combined with high sense of discipline and won the admiration, appreciation and recognition of his superiors. He was always amenable to reason and methodical, meticulous and thorough in his work.

He was a lovable, affable genetlemen par excellence whose sweet and gentle nature attracted everyone. His humility, geniality and friendly

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

disposition has built a very large circle of friends both in Jaffna and Colombo where he lived and worked and this was evidenced by the large number of people who had come to pay their last respects.

His loss is indeed immeasurable especially to his parents, brothers and only sister.

It is indeed a great tragedy that God has snatched him at the prime of his life. But, who can stop the wheel of destiny. Death is inevitable and is only an end to the mortal frame, the soul take on new births.

"We know not what the future holds
We cannot see ahead
The many winding of the Road
That we must onward tread
But a tender Father plans it all,
So why we have to fear "

May his soul rest in peace.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# தேவாரம்

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே
இருங்கடல் வையத்து
முன்மை நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாழ்தனை வாயாரப்
பன்னி யாதரித்தேத்தியும் பாடியும்
பரவிடும் அதனாலே.

# திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிர என்கண் குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும்அந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ளை
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமாரு மூன்றும்
திருந்து சாத்துவிக மேயாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையிற் தனிக்கெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

சோடிழந்த அன்றிலேப் போல் துயரமானேன்
தோகைமயில் வாயிலகப்பட்ட சர்பமானேன்
காடுகளில் இனம் பிரிந்த கலைகளானேன்
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானேன்
ஓடுகின்ற பாய்மரத்தின் கர்பமானேன்
கூற்ற துணையில்லாப் பித்தனானேன்
பாடுபட நானறியேன் பழனிமலையப்பா
பச்சைமயில் மீது வந்து ரட்சிப்பாயே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

அருள்திரு தேவராய சுவாமிகள்

இயற்றிய

# கந்தர் சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

### நிலைமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் ப்ர்டக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்

கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்

றுன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை யிரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க

எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க

பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தனெனைக் கண்டாற் கலங்கிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கைகால் முறியக்

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கள்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணைபருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக்கு கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்து தேவர்கள் கடுஞ்சிறை விதித்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட னிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்கவாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்

சிந்தைகலங் காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதி யேசெபித் துகந்தநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவார்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே

மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

**கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி
இருக்கின்ற தென்பது மெய்தானே — இதை
மறக்கின்ற மானிடர் இவ்வையகம் உண்டோ
துறக்கின்ற உடம்பை நீக்கி தூய முருகன் பாதம் சிவகுமார் பெற்றார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமாட்டில் குத்து விளக்குகள்

அந்தக் குத்து விளக்குகள் தலைமாட்டில் எரிந்து கொண்டிருக்கின்றன.

அவை எரிந்தாலென்ன அணைந்தாலென்ன ? அந்தப் படுக்கையில் கிடக்கும் மனித விளக்கு அணைந்துவிட்டது.

அது எரிந்து கொண்டிருந்தவரை குத்துவிளக்குகளுக்கு எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தது. ஆனால் அந்த விளக்குக்கு ஊற்றும் எண்ணெயை இறைவன் ஊற்றாமல் விட்டு விட்டான்.

அழுவாரையும், சிரிப்பாரையும் அறிய முடியாத சடலத்திற்கு, அந்த விளக்குகள் எந்த வகையில் உதவப் போகின்றன ?

அந்த விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் உங்கள் கைகளே! உங்கள் விளக்கை ஏற்றுவதும் அணைப்பதும் எவனுடைய கைகள் ?

மெய்ஞ்ஞானிகளும், விஞ்ஞானிகளும் இங்கேதான் யோசிக்கிறார்கள்.

எல்லோருடைய விளக்குகளும் அணைய வேண்டியதே. அவை எரிந்த காலத்தில் எத்தனை பேருக்கு வழி காட்டின என்பதே முக்கியம்.

அந்தச் சடலத்தை நீங்கள் நன்றாகப் பார்த்துக் கொள்ளவே அந்தக் குத்து விளக்குகள் எரிகின்றன.

பிறந்த விளக்கு அணைந்து கிடப்பதைச் செய்யப்பட்ட விளக்குகள் காட்டிக் கொண்டிருக்கின்றன.

மானுடத்தின் சாகசம் மரணப் படுக்கையோடு நின்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

கடந்த 17-06-1996 இல் நடைபெற்ற எங்கள் அன்பு மகன் / சகோதரன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும், தொலைபேசி, தந்தி, கடிதம் ஆகியவற்றின் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து மரியாதை செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல வகைகளிலும் உறுதுணையாக இருந்து ஒத்துழைப்பு நல்கிய உற்றார் - உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும் இன்றைய அந்தியேஷ்டிக் கிரியை நிகழ்வில் எங்கள் அன்பு மகன்/சகோதரனின் ஆத்ம சாந்திக்காக நடைபெற்ற பூசையில் பங்கேற்ற யாவருக்கும், இந்நூலை அழகுற அச்சுப்பதிவு செய்த Laxsu Graphics அச்சகத்தாருக்கும் எம் மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி !

இங்ஙனம்
தந்தை, தாய்,
சகோதரர்கள்

F37, சென். அன்ரனீஸ் மாவத்தை,
கொழும்பு - 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org